DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.505/2023**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்டாலின் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ஜோசப் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பாக தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய திரு.அன்சாரி உசேன் அவர்களின் எழுத்துக்களையும் நன்கு தெரியும். அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.08.2023 ம் தேதி காலை 9.00 மணிக்கு சார்பு ஆய்வாளர், 1ம் நிலைக்காவலர் சிலம்பரசன், 2ம் நிலைக்காவலர் ராதாரவி ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக தேவகோட்டை வீரபாண்டியபுரத்தில் காண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் எதிரி ஒரு சாக்குப்பையில் 180 ml

அளவுள்ள blackperal பிராண்டி 3 மதுபான பாட்டில்களை சுய லாபம் கருதி வைத்திருந்ததை சார்பு ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றி காவல் நிலையம் கொண்டு வந்தார். **(மேற்படி அத்தாட்சி மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் காவல் நிலையம் கொண்டு வந்து தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண்.188/2023, 4(1)(a) TNP Act ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் மதுபான பாட்டில்களை உயர் அதிகாரியின் உத்தரவுக்கு இணங்கி காவல் நிலையம் பின்புறம் வைத்து அழித்தல் மகஜர் தயார் செய்து மது பாட்டில்களை அழித்துள்ளார். **(மேற்படி அழித்தல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

இவ்வழக்கில் தனிநபர் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். சுய லாபம் கருதி யாருக்கு விற்றார்கள் என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்ட பின்பு எவ்வளவு நேரம் கழித்து கொட்டி அழித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மதுபாட்டில்களை கொட்டி அழிக்கும் அதிகாரம் சார்பு ஆய்வாளருக்கு கிடையாது, ஆய்வாளருக்குதான் உண்டு என்று சொன்னால் ஆய்வாளரிடம் கேட்ட பின்புதான் கொட்டி அழிப்பார்கள். புள்ளிவிபரத்திற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.